அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 03074/அ1/2023, நாள்.27.11.2023

பொருள் பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – பணிவரன்முறை – அரியலூர் மாவட்டம் – அரியலூர் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர் திருமதி.செ.கோகிலா என்பாருக்கு, இளநிலை உதவியாளர் பதவியை வரன்முறை செய்து ஆணை வழங்கியமை – அசல் ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு – அனுப்பி வைத்தல் – சார்பு.

பார்வை
01. அரசாணை(3ப)எண்.17, பள்ளிக் கல்வி (ப.க.3(1)த்துறை, நாள்.03.10.2023.
02.சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.026922/ஜே/இ2/2023, நாள்.16.10.2023
03.அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.07807/அ1/2021, நாள்.11.10.2022.
04.அரியலூர் வட்டாரக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.0865/அ1/2023, நாள்.11.05.2023.

---------

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரக்கல்வி அலுவலகத்தில் கருணை அடிப்படையின் கீழ் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, 14.10.2022 முற்பகல் முதல் நாளது தேதி வரையில் பணிபுரிந்து வரும் திருமதி.செ.கோகிலா என்பாருக்கு அவர்தம் இளநிலை உதவியாளர் பதவியினை வரன்முறை செய்து ஆணை வழங்க கோரிய கருத்துருக்கள் பார்வை(4)–ல் கண்டுள்ளவாறு பெறப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு பணிந்தனுப்பி வைக்கப்பட்டது. அதனடிப்படையில், திருமதி.செ.கோகிலா என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பணியில் 14.10.2022 முற்பகல் பார்வை(1)–ல் கண்டுள்ள அரசாணையின்படி, பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விவரத்தினை அன்னாரின் அசல் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடவும், அசல் ஆணை, அசல் கல்வித் தகுதி சான்றுகள் மற்றும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைத்திடவும் அரியலூர் வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு–
அசல் ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு
மற்றும் அசல் கல்வித் தகுதி சான்றுகள்

27/11/23

முதன்மைக்கல்வி அலுவலர்,
அரியலூர்.

பெறுநர்
1. வட்டாரக் கல்வி அலுவலர், அரியலூர்.

27/11/23

27/11/23

வட்டாரக் கல்வி அலுவலர்
அரியலூர் - 621704.

Scanned with OKEN Scanner

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.செ.கோகிலா, தா/பெ. (மறைந்த) திருமதி.இரா.சாந்தி, கலை ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, செந்துறை, அரியலூர் மாவட்டம் – இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[ப.க.3(1)] துறை**

அரசாணை (3ப) எண்.17

நாள் 03.10.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது, புரட்டாசி 16

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண். 026922/ஜே/இ2/2023, நாள் 26.06.2023.

********

**ஆணை:–**

அரியலூர் மாவட்டம், செந்துறை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், கலை ஆசிரியராகப் பணிபுரியும் போது திருமதி.இரா.சாந்தி என்பார், பணிக்காலத்தில் 02.06.2014 அன்று காலமானார் என்றும், அன்னாரின் கணவர் அவரது வாரிதாரரான மகள் திருமதி.செ.கோகிலா என்பாருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 15.05.2017 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 08.02.1998 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திருமதி.செ.கோகிலா என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில்

Scanned with OKEN Scanner

தற்காலிகமாகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, அரியலூர் மாவட்டம், செந்துறை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலை ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் பணியிடைக் காலமான திருமதி.இரா.சாந்தி என்பவரின் வாரிசுதாரரான அவரது மகள் திருமதி.செ.கோகிலா என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
முதன்மைக் கல்வி அலுவலர், அரியலூர் மாவட்டம்
(பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
05/10/23

27/1/25

வட்டாரக் கல்வி அலுவலர்
அரியலூர் - 621704.

Scanned with OKEN Scanner